## 81. கண்ணீரின் பாதையிலே

### பல்லவி

கண்ணீரின் பாதையிலே
கர்த்தர் என்னோடிருக்கிறார்
கவலையின் வேளையிலே
கருத்தோடு காக்கின்றார்

### அனுபல்லவி

*இயேசுவே உம் வழியில்*
*நான் சென்றிடுவேன்*
*என் சிலுவை சுமந்திடுவேன்*
*உமக்காய் வாழ்ந்திடுவேன்*

### சரணங்கள்

1. எங்கள் துக்கம் நிரந்தரம் அல்ல
சந்தோஷமாய் மாறிடுமே
கண்ணீர் யாவும் துடைத்திடுவீர்
களிப்பாக மாற்றிடுவீர்

- இயேசுவே

2. உலகத்தில் உபத்திரவங்கள்
நமக்கு உண்டு தானே
இந்த உலகத்தை ஜெயித்தவர்
நமக்கு உதவி செய்வார்

- இயேசுவே

3. இயேசுவின் நாமத்திற்காய்
பாடுகள் ஏற்று கொள்வோம்
மகிழ்ந்து களிகூறுவோம்
பரலோகில் பலன்பெருகும்

- இயேசுவே